பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

கடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 02 வெள்ளிக்கிழமை (15-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 110

தென்மராட்சியில் புடைவைகளின் மகாநதி
மகாநதி புடைவை அகம்
4, சிறப்பு அங்காடி, சாவகச்சேரி.

சகல விதமான புடைவைக்கும்
மகாநதி புடைவை அகம்
4, சிறப்பு அங்காடி, சாவகச்சேரி.

# திருகோணமலை கடற்படைத் தளத்தினுள் தற்கொலைப் படையினர் ஊடுருவலாம்!

## துருப்புகள் நேற்று முதல் தேடுதல்

கொழும்பு, மார்ச் 15

திருகோணமலை கடற்படைத் தளம் மீது தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக அப்பகுதிக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் ஊடுருவியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

இதனையடுத்து அறுநூறு கடற்படையினர், நூறு பொலீஸார், ஐநூறு இராணுவத்தினர் கொண்ட படை அணிகள் திருகோணமலைத் துறைமுகம், கடற்படைத் தளம் ஆகியவற்றிலும் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளிலும் நேற்று பெரும் வேட்டை ஒன்றை ஆரம்பித்ததாக அறிவிக்கப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகத்தின் மூதூரை அண்டிய பகுதியிலேயே நேற்று தேடுதல் நடத்தப்பட்டது.

இதற்கிடையில் —

திருகோணமலைக்குத் தெற்கே புலிகள் தமது பலத்தை அதிகரித்து வருவதாகவும்—

திருகோணமலை கடற்படைத்தளத்தை செயல் இழக்க வைப்பதே புலிகளின் நோக்கமாக இருக்கலாம் என்றும்— ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கின் மீது மீண்டும் பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்காப் படைகள் திட்டமிட்டு வருகின்றன.

திருகோணமலை கடற்படைத்தளத்தை செயலிழக்க வைப்பதன் மூலம் வடக்குக்கான படை நகர்வையும்—

ஆயுத விநியோகத்தையும்- சீர்குலைக்கலாம் என்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் கருதுகிறது.

கடற்புலிகளின் பலத்தை முறியடிக்க மூதூருக்கும் கிண்ணியாவுக்கும் இடையில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கடலுக்கு அடியில் தாக்குதல் நடத்தும் கடற்புலிகளின் பயமுறுத்தலைச் சமாளிக்க சோனார் (Sonar) கருவிகள் கடற்படைப் படகுகளில் பொருத்தப்பட்டுள்ளன.

இப்படி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### 8 சிப்பாய்கள் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 15

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசம் கிளிவெட்டியில் உள்ள குமரபுரம் தமிழ் கிராமத்தில் கடந்த மாதம் படையினர் நடத்திய வெறியாட்டத்தில் 24 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஷெல்: இரு சிறுவர் பலியாகினர்

சாவகச்சேரி, மார்ச் 15

மட்டக்களப்பு மாவட்டம் 38ஆம் கொலணி புதுவெட்டி என்ற இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் பொன்னாங்காணி பிடுங்கச் சென்ற இரு சிறுவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்தனர்

க. ரவிச்சந்திரன் (13 வயது), ச. நவீந்திரராஜா (10 வயது) ஆகிய இருவருமே மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

படுகாயமுற்ற மற்றைய இருவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## ரொஹான் தளுவத்தை அடுத்த ராணுவத் தளபதி?

### ஜெரிக்கு பாதுகாப்பு அமைச்சில் பதவி

கொழும்பு, மார்ச் 15

இராணுவத்தின் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா வெகுவிரைவில் தமது பதவியில் இருந்து ஓய்வுபெற இருப்பதை அடுத்து இவரின் இடத்துக்கு பதில் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தை கடந்த சனிக்கிழமை முதல் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தையை இராணுவத் தளபதியாக நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வுபெறும் லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச மன்னிப்புச் சபை மட்டக்களப்பு வரத் தடை

இலங்கை வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

மார்ச் 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் மதத்தலைவர்களையும் அரச அதிகாரிகளையும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும் அரசியல்வாதிகளையும் இந்தக்குழு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்புக்கு இவர்கள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் தம்மால் உத்தேச திட்டத்தின்படி வர முடியாதுள்ளதாக இந்தக் குழுவினர் மட்டக்களப்பில் உள்ள நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்துள்ளனர். (இ-7)

# பெரிய அளவில் விரைவில் அமைச்சரவை மாற்றம்

## சிறிமணிக்கு பிரச்சினைக்குரிய அமைச்சு?

கொழும்பு, மார்ச் 15

பெரிய அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறப் போவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியால் இந்த மாற்றங்கள் கொண்டு வரப்படும்போது அமைச்சரவையில் நான்கு புதிய முகங்கள் இடம்பெறும் என்றும் அச் செய்திகள் தெரிவித்தன.

உத்தேச மாற்றத்தின் போது தற்போது சர்ச்சைக்குரிய அமைச்சாகக் கருதப்படும் சுகாதார அமைச்சு திருமதி சிறிமணி அத்துலத்முதலியிடம் ஒப்படைக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

டாக்டர்கள், தாதிமார்கள், ஆஸ்பத்திரி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றோரின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் மற்றும் கோரிக்கைகள் தீவிரமடைந்திருப்பதால் அந்த அமைச்சில் பல நெருக்கடிகளை தற்போதைய சுகாதார அமைச்சர் பௌஸி எதிர்நோக்கி வருவது தெரிந்ததே.

அரசுக்குள் தனக்கு நெருக்கடிகளைத் தந்துவரும் புதிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## "அன்ரனோவ்" விமானங்கள் மீண்டும் உ-க்ரைனில் இருந்து வாங்கப்படும்!

### தனியார் விமானங்களால் பல கோடிரூபா செலவு

பலாலி — இரத்மலானை இடையே பொருள்கள் மற்றும் துருப்புகளை ஏற்றி இறக்கும் பணியில் தனியார் விமானங்களை அதிக வாடகைக்கு அமர்த்தியதால் எழுந்துள்ள பெரும் நிதி நெருக்கடியை அடுத்து —

இச்சேவைக்கு என தனியான விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது ஒரு நாளைக்கு நான்கு விமானங்கள் வாடகைக்கு பயன்படுத்தப்படுவதாகவும் —

இதற்காக மாதாந்தம் பல கோடி ரூபாக்களை அரசு செலவிட வேண்டியிருப்பதாகவும் —

அந்தச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

வேறு வழியில்லாததால் ஏ. என். 32 ரக விமானங்களை அல்லது வேறு விமானங்களை அரசு வாங்கியே தீரவேண்டும் என்றும் —

அன்ரனோவ் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக — அவற்றைப் பரிசோதனை செய்ய — ஸ்ரீலங்கா விமானப் படையின் உயர் மட்டத் தூதுக்குழு ஒன்று உக்ரைன் நாட்டுக்குச் சென்றது என்றும் —

விமானங்களைச் சோதனையிட்ட பின்னர் அக்குழு திங்களன்று நாடு திரும்பியுள்ளது என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில மாதங்களுக்குள் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய விமானப்படை விரும்புவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினாலும், மர்மமான முறையிலும் கடந்த ஆண்டில் அவ்ரோ விமானங்கள் — இரண்டு, ஏ. என். 32 ரக அன்ரனோவ் விமானங்கள் — இரண்டு, வை — 8 ரக விமானம் — ஒன்று ஆகியவற்றை ஸ்ரீலங்கா விமானப்படை இழந்தது தெரிந்ததே. (உ)

## அதிசக்தி வாய்ந்த 40 தொன் வெடிமருந்து

### புலிகளிடம் உள்ளதாக தகவல்

அதிசக்தி வாய்ந்த நாற்பது தொன் வெடி மருந்துகள் விடுதலைப் புலிகளின் வசம் உள்ளன.

இது பற்றிய தகவல் தங்களுக்கு கிடைத்திருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்த வெடிமருந்து களை விடுதலைப் புலிகள் ரஷ்யா, உக்ரைன், [illegible] போன்ற நாடுகளில் இருந்து காலத்துக்கு காலம் கப்பல்கள் மூலம் வடக்கே கொண்டு வந்துள்ளனர் என்பதற்கு நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டிருக்கின்றார். (உ-6)

### ஜே. ஆர். சுகவீனம்

கொழும்பு, மார்ச் 15

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சுகவீனமடைந்து கொழும்பு ஆஷா மத்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

### மன்னாரில் படகுகள் கடத்தப்பட்டன

கொழும்பு, மார்ச் 15

மன்னார் — [illegible] வத்துறை கடற் பிராந்தியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை [illegible] 20 லட்சம் பெறுமதியான மூன்று மீன்பிடிப் படகுகளும் 13 மீன் [illegible] இனந்தெரியாதோர் [illegible] கடத்திச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## சிறிமாவின் குடியுரிமை: புதிய பிரேரணை வரும்

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது 1980 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட குடியுரிமைத் தடைப் பிரேரணையை அகற்றும் விதத்தில்—

புதிய பிரேரணை ஒன்றை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது.

சிறிமாவோவின் குடியுரிமையைப் பறித்ததை எதிர்த்து வழக்குக் கூடத் தாக்கல் செய்யமுடியாது என்று தடுக்கும் விதத்தில் ஜே. ஆர் அரசு கொண்டு வந்து நிறைவேற்றிய பிரேரணை அமைந்துள்ளது.

இதனை முற்றாக நீக்கி விடும் பிரேரணையை அரசு கொண்டு வரவுள்ளது. இது சம்பந்தமாக நேற்றைய அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது. (அ-6-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட்:

## இறுதியாட்டத்தில் ஆஸி - ஸ்ரீலங்கா

### சர்ச்சைக்குரிய அணிகள் மோதல்

சண்டிகர், மார்ச் 15

ஏற்கனவே ஒன்றுக்கொன்று சர்ச்சைப்பட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணிகள் நாளை மறுதினம் பாகிஸ்தானின் லாகூர் நகரில் 'வில்ஸ்' உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் மோதவிருக்கின்றன.

நேற்று இந்தியாவின் சண்டிகர் நகரில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான — அரையிறுதியாட்டத்தில் கடைசி நேரம் வரை சளைக்காமல் — திறமையாக — விளையாடி வெற்றி பெற்றதன் மூலம் ஆஸ்திரேலிய அணி இறுதியாட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் இந்தியாவைத்தோற்கடித்து ஸ்ரீலங்கா அணி இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியிருந்தது ஏற்கனவே தெரிந்ததே.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் கொழும்பில் ஸ்ரீலங்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

### வெல்லாவெளி பகுதியில்மீண்டும் தாக்குதல்

கொழும்பு மார்ச் 15

கடந்த திங்கட் கிழமை 23 படையினர் கொல்லப்பட்ட வெல்லாவெளியில் புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

கடந்த புதன் கிழமைஇரவு நடத்தப்பட்ட இத்தாக்குதலில் நான்கு பொலீஸார்காயம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இலங்கை அரசின் தீர்வுத் திட்டத்தில் இந்தியாவுக்கு அக்கறையாம்!

கொழும்பு, மார்ச் 15

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தின் பின்னணியில் இந்தியக் கையொன்று உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

அரசின் தீர்வுத் திட்டத்தை அரசமைப்புக் கூட்டத்தில் எவ்வாறெனினும் சேர்த்துவிட வேண்டும் என்பதில் சம்பந்தப்பட்ட இந்தியத் தரப்பு மிகவும் அக்கறை காட்டி வருவதாக 'திவயின' சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய உயர்மட்ட நிறுவனம் ஒன்றின் முன்னணி அதிகாரிகள் இருவர் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை இரகசியமாகச் சந்தித்துப் பேசியதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு முன்வைத்துள்ள திட்டத்துக்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அதனை ஆதரிக்க வேண்டும் என்று இந்தியத் தரப்பினர் தமிழ்க் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இதேவேளை இந்திய இரகசியப் புலனாய்வு நிறுவனமாகிய 'றோ'வின் பிரதிநிதிகள் சிலரும் கொழும்பு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்வுத் திட்டம் குறித்து இங்கு நிலவும் சூழ்நிலை குறித்து அறிக்கை தயாரிப்பதும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தகவல் திரட்டுவதுமே 'றோ'வின் முக்கிய பணிகளாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. (அ)

## மத்தியவங்கி ஊழியரில் அரைவாசிபேர் இன்னும் கடமைக்கு திரும்பவில்லை

### திருத்த வேலைகள் முடிய ஒன்றரை வருடம் செல்லும்

தற்போது தற்காலிக கட்டடம் ஒன்றில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களில் இது வரை அரை வாசிப்பேரே கடமைக்குத் திரும்பி உள்ளனர் என்று மத்திய வங்கி ஆளுநர். ஏ. எஸ். ஜெயவர்தனா தெரிவித்தார்.

மத்திய வங்கியின் அனைத்துப் பிரிவுகளையும் இயங்க வைப்பதற்குப் போதுமான இடவசதியையும், பாதுகாப்பு ஏற்பாட்டையும் கொண்ட கட்டடம் ஒன்றுகிடைக்க வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குண்டு வெடிப்பினால் சேதமடைந்த மத்திய வங்கியைத் திருத்துவதற்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் செல்லும் என்று திருத்த வேலைகளைப் பொறுப்பெடுத்துள்ள ஜேர்மன் நிறுவனம் தெரிவித்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் கூறினார். (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சாலி (Honda) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. கண்ணன், சிவா எரிபொருள் நிலையம், நெல்லியடி- யாழ். வீதி, பெற்றோல் நிலையம் அருகாமை, நெல்லியடி. (41033)

எறிக்கா தமிழ் தட்டச்சு இயந்திரம், ஸ்டீல் கபினட், சோகேஸ், கதிரை, மேசைகள், கட்டில் தளபாடங்கள், கண்ணாடி மேசை, கலர் T. V. 20'' x 32'' ஆகியன விற்பனைக்குண்டு. மாலை 2-00 மணிக்கு பின் பார்வையிடலாம். சோ. நடராசா, திருத்தணிகை, விகவர் வளவு (மத்திய சனசமூக நிலையத்திற்கு அருகாமையில்), சரசாலை. (41035)

21 இழை — பச்சை நிறம் — 5 இஞ்சி, 21 இழை — பச்சை நிறம் — 7 இஞ்சி புதிய வலைகள் விற்பனைக்குண்டு. துரை, துன்னாலை வடக்கு, பிறேம்நாத் வீதி. (41006)

## தேவை

அலுமாரி, பின்னல் செற்றி, கதவு, ஸ்ரீல் அலுமாரி, இரும்புப்பெட்டி, கதிரைகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். மனோகரன், திருக்குற்றலாம், சரசாலை தெற்கு, சரசாலை. (40476)

சைக்கிள் கியர் திருத்துவதில் அனுபவம் உள்ள திருத்துநர் தேவை. நேரில் வரவும். க. தியாகராசா ரவி, றோயல் கல்வி நிலையம், புற்றளை பிள்ளையார் கோவிலடி, புலோலி தெற்கு, புலோலி. (40349)

வீட்டு அலுவல்களைக் கவனிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. தொடர்பு கொள்ளவும்: க. துரைரட்ணம், ஸ்ரீஸ்கபே, பிரதான வீதி, பருத்தித்துறை. (41014)

## ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேச, பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, C/o செ. தங்கராசா, பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (41024)

## மணமகள் தேவை

பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் சொந்த வர்த்தக நிலையம் வைத்திருக்கும் 7இல் செவ்வாய் உள்ள பாவம் குறைந்த 31 வயது அத்த நட்சத்திர மணமகனுக்கு செவ்வாய் தோஷம் உள்ள மணமகள் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். மே/பா இல 56, உதயன், சரசாலை தெற்கு. (40943)

## மணமகன் தேவை

ஆசிரியர் சேவையிலிருந்து ஒய்வுபெற்று ஆலய அர்ச்சகரான தந்தை A/L படித்த, 33 வயது நிரம்பிய பரணி, உதயத்தில் செவ்வாய், கிரக பாவம் 55 உள்ள அழகிய மகளுக்கு உள் நாட்டிலோ, வெளிநாட்டிலோ நிரந்தரத் தொழிலும், நற்பண்பும் உடைய மணமகனைத் தேடுகிறார். சோ. ரங்கநாதஐயர், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (40934)

---

# பணிநிலை வெற்றிடங்கள்

விரைவில் மாங்குளம் பகுதியில் செயற்படவிருக்கும் தனியார் மருத்துவமனைக்கு கீழே குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

விண்ணப்பிக்க விரும்புவோர் **15 - 03 - 96** (வெள்ளி), **16 - 03 - 96** (சனி) ஆகிய தினங்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரை யாழ். சாலை, கிளிநொச்சியில் மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள நோயாளர் நலன்புரிச் சங்க நடுவப் பணியகத்திற்கு உரிய ஆவணங்கள், சான்றிதழ்களுடன் நேரில் சமுகந் தரவும்.

### பணிநிலைகள்

| | | |
|---|---|---|
| 01. | மருத்துவர் | — (M.B.B.S.) OR (R. M. P.) |
| 02. | பல் மருத்துவர் | — (DENTAL SURGEON) |
| 03. | தாதிகள் | — (NURSES) |
| 04. | பரிசாரகர் | — (ATTENDENT) |
| 05. | ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் | — (M. L. T.) |
| 06. | மருந்தாளர் | — (PHARMACIST) |
| 07. | மருத்துவ மாது | — (MIDWIFE) |
| 08 | சாதாரண தொழிலாளர் | — (O. L.) |
| 09. | சுத்திகரிப்புத் தொழிலாளர் | — (S. L.) |
| 10 | பாதுகாப்பு ஊழியர் | — (WATCHER) |

★ அனுபவமுடையவர் விரும்பத்தக்கது. (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

நடுவப்பணியகம்,
நோயாளர் நலன்புரி சங்கம்,
யாழ். சாலை, கிளிநொச்சி.

(சி-4111)

---

ஓராமாண்டுக் கண்ணீர்

# நினைவஞ்சலி



உடையார்
**சிவ. நல்லமாப்பாணர்**
**சிவபாக்கியம் அம்மையார்**
(உடுப்பிட்டி, நவிண்டில் — வரணி, மந்துவில்)

இறப்பு: **26 - 03 - 1995** ஓராமாண்டு நிறைவு: **26 - 03 - 1996**

திதி: **15-03 - 96**

அன்னையே! உன்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் உன்னை நினைந்து உருகுகிறார்கள்! கண்ணீர் சிந்துகிறார்கள்!

நானும் திசை தெரியாக் கப்பலைப் போல் தத்தளிக்கின்றேன்! கலங்குகிறேன்! துன்பத்தீயில் வெந்து மடிகிறேன்! என்செய்வது? மாண்டநீ, இனி மீண்டும் வரப்போவதில்லை என்பதை உணர்ந்து என் நெஞ்சகத்தைத் தேற்றிக் கொள்கிறேன்.

உன் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல மந்துவில் ''தாளையடி'' விநாயகனை அனுதினமும் இறைஞ்சுகிறேன்.

இங்ஙனம்
உனது பேரன்பிற்குரிய மிகுந்த பாசமுள்ள,
மூத்த மகன்,
சி. ந. சிவசுப்பிரமணியம்

''சிவபாக்கிய புரி''
மந்துவில்,
கொடிகாமம் (41034)

---

இன்று இளைப்பாறி

60 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
சாவகச்சேரி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்

# திருமதி புஸ்பா கணேசலிங்கம்

அவர்களை

# வாழ்த்துகிறோம்

சிறந்திடு நீதி நேர்மை செப்பிடு மருளல் பண்பு
அறந்தரு சிந்தையோடு அன்புசேர் தாய்மை பூண்டு
மறந்திடா தென்த நாளும் மக்களோடிணைந்து வாழப்
பிறந்தவர் என்று நாமும் பெருமையால் பூரிக்கின்றோம்.

பெருங்கலை பயின்று எம்.ஏப்பட்டத்தை புவந்து பெற்று
அருங்கலை பயிற்றும் நல்ல ஆசானாயதிபராகி
தருமறிவியலிற் தேர்ந்த தகைமைசேர் தலைவியாகி
வருமொரு வாழ்வில் யார்க்கும் வழிகாட்டினாய் நீ வாழி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் [illegible]
மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்

(41032)

---

தேவை

# அச்சுக்கோர்ப்பாளர்கள் மெசின் மைன்டர்கள்

மேற்படி தொழில்களில் அனுபவமுள்ள ஆண்கள் நேரடியாக வரவும், தெரிவு செய்யப்படுபவர்களுக்கு உணவும் தங்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும். தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
உதயன் பணிமனை,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

---

# இன்று திறப்பு விழா

யாழ். (வெஸ்கோ) மருந்தகத்தின் கிளை நிறுவனம், மந்திகை ஆஸ்பத்திரிக்கு முன்பாக இன்று (**15-03-1996**) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு, வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ளது.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறைந்த விலையில் ஆங்கில மருந்து, பால்மா, பல்பொருள்களை பெற்றிட நாடவேண்டிய நிறுவனம்:

**யாழ் (வெஸ்கோ) மருந்தகம்**

(41037)

---

# ஆனந்தம் சியாக்காய்ப் பவுடர்

(1) தற்போதைய சீதோஷண நிலைக்கேற்றவாறு சிரசின் தனித்துவத்தைப் பேணுமுகமாக தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சியாக்காய் பவுடர்.
(2) சித்த மருத்துவ நிபுணரின் ஆலோசனையின் படியும் இன்றைய கால நிலைக்கேற்ப மூலிகைகளுடன் சியாக்காயும் சேர்த்து தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சியாக்காய் பவுடர்.
(3) பல ஆண்டு காலமாக எல்லோரது நன்மதிப்பையும் பெற்று பலராலும் பாராட்டுப் பெற்றது ஆனந்தம் சியாக்காய் பவுடர்.

## தற்போதைய சீதோஷண நிலையில் ஷாம்பூவினால் ஆபத்தாம்!

தலைமயிரை அழகாக வைத்திருப்பதற்குப் பயன்படும் ஷாம்பூவினால் முடி உதிர்தல், தோல்நோய் என்பன ஏற்பட வாய்ப்பு உண்டாகின்றது என்று யப்பானில் உள்ள மிக்கியாமி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

நன்றி.
ஆதாரம்: அருள் ஊற்று.

தகவல் அனுப்பியவர்: திரு. ந. ஜீவேஸ்வரா,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்

எனவே எல்லோரும் ஆனந்தம் சியாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கி பாவித்து பலன் பெறுவீர்களாக.

விநியோகஸ்தர்:
**ஸ்ரீவிக்னேஸ்வரா களஞ்சியம்**
யாழ் சாலை, கரடிப்போக்கு,
கிளிநொச்சி. (41021)

---

தென்மராட்சிக் கோட்ட
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## திருமதி புஸ்பா கணேசலிங்கம்

அவர்களை

## வாழ்த்துகிறோம்

ஆசிரியப் பணியில் காலடி எடுத்து வைத்து அதிபராக, விஞ்ஞானக் கல்வி அதிகாரியாக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பல்வேறு படி நிலைகளில் நின்று 39 ஆண்டுகள் சேவையாற்றி அறுபதாவது அகவையில் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறும் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் நலமுற வாழ வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்லூரி அலுவலர்,
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

(10947)

---

# காணவில்லை

## செல்வன் ச. கமல்ராஜ்

வசாவிளான் தெற்கு, குட்டியபுலத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சந்திரசேகரம் ஆகிய எனது மகன் கமல்ராஜ்யை 10 - 3 - 96 பி.ப. நான்கு மணி முதல் காணவில்லை. வயது 14, பொதுநிறம், இவர் நீலநிறக் [illegible] சாம்பல் நிற சேட்டும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து [illegible] காணும் [illegible] தகவல் தரவும்.

''என[illegible] அன்பு மகனே! உனது தாயார் உயிருக்காகப் [illegible] கொண்டிருக்கிறார். உடனே வந்து [illegible]ரவும்.''

தகவல்:
தந்தை (அப்பன்)
பருத்தித்துறை வீதி,
([illegible] வித்தியாசாலை முன்பாக)
[illegible] தெற்கு, சரசாலை.

(4103[illegible])

---

உ
ஓம் முருகா
தென் மட்டுவில் - வேரற்கேணி
அருள்மிகு

# ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் இலட்சார்ச்சனை விழா 1996

காலம்:- **13-03-1996** புதன்கிழமை முதல்
**22-03-1996** வெள்ளிக்கிழமை வரை

பிரதி தினமும் காலை 7-00 மணி முதல் 11-00 மணி வரையும் பிற்பகல் 3-00 மணி முதல் 6-00 மணி வரையும் விசேட அபிஷேக ஆராதனைகளும், ஷண்முக அர்ச்சனையும் இடம்பெறும்.

மேலும் எதிர்வரும் **வியாழக்கிழமை 21-03-96** பகல் 11-30 மணிக்கு மேல் வரும் சுபவேளையில் கோஷ்ட தேவர்களான நர்த்தனவிநாயகர், தெட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை மற்றும் சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீநடராஜப்பெருமான், வேணுகோபர் ஆகிய மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் இடம்பெறும்.

**20 - 03 - 1996 புதன்கிழமை** காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

கந்தன் அடியார்கள் மேற்படி காலங்களில் வந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அருள்பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— தர்ம பரிபாலன சபை —

(41038)

---

முக்கிய அறிவித்தல்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

# பொதுச் சபைக் கூட்டம்

இடம்:- ஞான உதய கல்வி நிலையம்
பிரதான வீதி, சாவகச்சேரி.

காலம்: 17-03-1996 (ஞாயிறு பி.ப. 3 மணி)

விடயம்: தனியார் கல்வி நிலைய வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலும், ஆரம்பிப்பதற்கான காலம் நிர்ணயித்தலும்

மு. கு: தீர்மானங்கள் தனித்தனி அறிவிக்கப்படமாட்டாது. ஆதலால் சிரமத்தை பெருட்படுத்தாது சகல கல்வி நிலைய இயக்குநர்களும், ஆசிரியர்கள், பிரத்தியோக வகுப்பு நடத்தும் ஆசிரியர்கள் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். செயலாளர்.

(41012)

---

# மணி விழா

எங்கள்
வெற்றிவேல் மாஸ்ரர் அவர்களுக்கு

## நாம் எடுக்கும் பெரு விழா

பருத்தித்துறை பூதவராயர் கோவில் ஒழுங்கையில் அறுபதாண்டு காலமாக பல மாணவர்களுக்கு கல்வி அறிவு ஊட்டியும் விசேடமாக அரச திணைக்களங்களில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளுக்குரிய பாடங்களில் பயிற்சி வழங்கி வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான அரச ஊழியர்களை உருவாக்கிய ஆசானாக விளங்கும் வெற்றிவேல் மாஸ்ரரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக விழா ஒன்றை இவ்வருடம் மே மாதம் முதலாம் வாரத்தில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

இவ்விழாவில் மாவீரரின் சேவையைப் பற்றிய மலர் ஒன்று வெளியிடுதல், பாராட்டுரை வழங்கல், மலர் மாலைகள், பொன் ஆடைகள் போர்த்தி கௌரவித்தல் போன்ற விடயங்கள் இடம்பெறும்.

ஆகவே இந்நிகழ்வுகளில் பங்குகொள்ள விரும்பும் ஆசிரியரின் பழைய மாணவர்கள், அறிஞர்கள், அதிகாரிகள், கல்விமான்கள் அனைவரும் மலர் ஆக்கத்திற்கும், தேவையான விடயங்கள், புகைப்படங்கள் என்பவற்றையும், விழாவிற்குத் தேவையான நிதியினையும், நிகழ்வில் பங்குகொண்டு, பாராட்டு உரைகள், பாராட்டுக் கவிதைகள் வழங்க விரும்பின் விருப்பத்தையும் இவ்விளம்பரம் கண்ட இரு வாரங்களில் எமக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

விழா மலரில் சங்க உறுப்பினர்களின் பெயர்கள், பதவிகள் குறிப்பிட எண்ணி இருப்பதனால் இதுவரை உறுப்பினர்களாகச் சேராமல் இருப்பவர்கள் உடன் சங்கத்தில் சேர்ந்துகொள்ளுமாறும் வேண்டுகின்றோம்

நிதி அனுப்பவிரும்பும் அன்பர்கள் இலங்கை வங்கி, பருத்தித்துறை க/கு இல. சி/7043 அல்லது தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை க/கு இல. சே. க. 1064க்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி.

வி. சேதுநாயகம்
(பரு.ப, நோ. கூ. ச.
தலைவர்)
தலைவர்

எஸ். அரியரத்தினம்
(அஞ்சலதிபர்,
பருத்தித்துறை)
பொருளாளர்

பொ. திருச்செல்வம்
செயலாளர்
(உதவி அஞ்சல் அதிபர், கரவெட்டி)

(வெற்றிவேலு மாஸ்ரர் நலன்பேணும்
பழைய மாணவர் சங்கம்)

தொடர்பு முகவரி:
திரு. எஸ். அரியரத்தினம்,
அஞ்சலதிபர், பருத்தித்துறை.
(40350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சோடிப் பொருத்தம்!

அரசின் தீர்வுத் திட்டத்துக்கு, சிங்களவர்களின் ஆதரவைத் திரட்டும் பயனில்லா முயற்சியில் ஈடுபட்டுள்ள கொழும்பில் உள்ள ஐந்து தமிழ்க்கட்சிகள், அண்மையில் மல்வத்தை மகாநாயக்கரைக் கூட்டாகச் சந்தித்துப் பேசின.

அப்போது அக்கட்சிகளின் தலைவர்கள் இரண்டு விடயங்களை முன்னிறுத்தி மகாநாயக்கரின் ஆதரவைப் பெற முயன்றிருக்கிறார்கள்.

இராணுவ ரீதியில் புலிகளை ஒழிக்க முடியாது. போரினால் புலிகளை வெல்ல முடியாது. ஸ்ரீலங்காப் படைகளால் அவர்களைத் தோற்கடிக்க இயலாது. அவர்களை தோல்வியுறச் செய்வதானால் — ஒழிப்பதானால் — அரசியல் தீர்வு ஒன்று தேவை. அதிகாரப் பரவலாக்கல் திட்டம் அதற்கு உதவும். இது முதலாவது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதாகவும் அவர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் ஒரு தீர்வை முன்வைத்தால் தான் புலிகளை ஒழிக்க முடியும். இது இரண்டாவது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்ற உண்மையை அறிந்த ஐந்து தமிழ்க் கட்சிகளில் மூன்று —

அவர்களை வெல்லும் நோக்குடன் போரில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் எடுபிடிகளாக இருந்து காட்டிக் கொடுக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன!

இராணுவத்தையும், அரசையும் ஏமாற்றித் தாம் பிழைத்துக் கொள்வதற்காகவே தமது கட்சிகள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றன என்ற உண்மையைத் தங்கள் வாயாலேயே இப்போது மறைமுகமாக வெளியிட்டுள்ளனர்!

தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அரசியல் தீர்வு ஒன்று தேவை; அந்தத் தீர்வு அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்கவேண்டும்; என்று நேரடியாகக் கூறாமல்—

அவ்வாறு செய்தால்தான் புலிகளை ஒழிக்க முடியும் என்று ஓர் அடை மொழியும் வைத்திருக்கிறார்கள்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை கொண்டு வர உழைப்பதைவிட, விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டும் என்பதிலேயே இந்த ஐந்து தமிழ்க் கட்சிகளும் அதிக அக்கறை காட்டுவது அவர்கள் நடத்திய பேச்சுக்களிலிருந்து பெரிதாகத் தொனிக்கிறது.

விடுதலைப் புலிகளை இராணுவத்தினால் வெல்ல முடியாது என்று தெரிந்து கொண்டவர்களுக்கு, அவர்களுடன் பேச்சு நடத்தாமல் அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வர முடியாது என்பதனை புரிந்து கொள்ள முடியாமல் போயிற்றா? அல்லது மகாநாயக்கரிடம் சொல்வதற்கு அவர்களுக்குத் துணிவில்லாமற் போய்விட்டதா?

விடுதலைப் புலிகளுடன் பேசியே அரசியல் தீர்வுகாண முடியும் என்பதனை வெளிப்படையாகச் சொன்னால் தமது அரசியல் அரோகராவாகிவிடும் என்ற பயத்தினால் அந்த உண்மையை அவர்கள் வசதியாக மறந்துவிட்டார்கள்!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கொண்டு வருவதாக சந்திரிகா வேடம் போட்டு நாடகம் ஆடுகிறார். அதேபோல தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தாங்களும் உழைக்கிறார்கள் என்று காட்டிக் கொள்ள கொழும்புத் தமிழ்க் கட்சிகள் வேடம் போடுகின்றன. அதனால் இரு வேடதாரிகளுக்கும் நல்ல சோடிப் பொருத்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதனை மல்வத்தை மகாநாயக்கர் நன்றாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அதனால் இவர்கள் கூறியதை எல்லாம் ஒரு காதால் கேட்டு அடுத்த காதால் விட்டுவிட்டார். உங்கள் கருத்துக்கள் குறித்து எனது நிலைப்பாடு என்ன என்பதனை ஆறுதலாகச் சொல்கிறேன் என்று முகத்தில் அறைந்து அனுப்பிவிட்டார். அவரது காதில் இவர்களால் பூவைக்க முடியவில்லை!

---

இடம்பெயர்ந்த

# ஆயுள்வேத வைத்தியசாலைகளை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை

சாவகச்சேரி, மார்ச் 15

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள சகல ஆயுள்வேத வைத்தியசாலைகளையும் மீள இயங்கச் செய்யும் பொறுப்பு யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வலிகாமத்தில் இயங்கிய பல ஆயுள்வேத வைத்தியசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன.

இவற்றை வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் மீள இயக்கவேண்டிய நடவடிக்கையை எடுக்கவும் — அதற்கான பிரச்சினைகளை கவனிக்கவும் — யாழ். அரச அதிபருக்கு வடக்கு - கிழக்கு ஆளுநர் அதிகாரம் வழங்கியுள்ளார். (இ 3)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி எக்ஸ்றே இயந்திரம்

### இயங்க ஆரம்பித்தது

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் எக்ஸ்றே இயந்திரம் இயங்க ஆரம்பித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தாபனத்தால் இந்த வைத்தியசாலைக்கு எக்ஸ்றே இயந்திரம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்ததாகவும்—

இதுவரை காலமும் அது பொருத்தப்படாமல் இருந்ததாகவும்— மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. எஸ். சிவகுரு தெரிவித்தார். (இ-3)

## 14 ஆவது ஆண்டு நிறைவு விழா

சாவகச்சேரி, மார்ச் 15

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (றாட்) 14 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி நவீலட் பாடசாலை மண்டபத்தில் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த திரு க. வசீகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (அ-7)

## மனையியல் ஆசிரியர் பதவிகள்

சாவகச்சேரி, மார்ச் 15

அரசாங்கப் பாடசாலைகளில் மனையியல் ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மனையியல் டிப்ளோமா சான்றிதழ் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

ஏனைய விவரங்களையும், வர்த்தமானி அறிவித்தலின் பிரதியையும் —

சாவகச்சேரி, நவீன சந்தை மேல்மாடியில் உள்ள உதயன் கிளைப் பணிமனையிலும் —

பருத்தித்துறை, பஸ்நிலைய சதுக்கத்தில் உள்ள உதயன் கிளைப் பணிமனையிலும் —

கிளிநொச்சி, கண்டி வீதி, வை. எம். சி. ஏ. கட்டடத்தில் உள்ள உதயன் கிளைப் பணிமனையிலும் பார்வையிடலாம். (அ)

## சாதாரணதர மாணவருக்கு

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள ஜி. சீ. ஈ (சாதாரண தர) 1995 பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் —

தமது முழுப் பெயர், பழைய முகவரி, விண்ணப்பித்த நகரம், நகர எண், தற்போதைய முகவரி, விண்ணப்பித்த பாடமும், பாட இலக்கமும் ஆகியவை அடங்கிய விவரங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பாடசாலைகளில் பதிவு செய்து கொள்ளும்படி கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கேட்டுள்ளார். (உ.ரி)

## கமக்கார அட்டை இழந்தோர் கவனத்துக்கு!

சாவகச்சேரி, மார்ச் 15

இராணுவ நடவடிக்கையினால் கமக்கார அறிமுக அட்டையை இழந்து விவசாயத்துக்கான உள்ளீடுகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ள விவசாயிகள் அருகில் உள்ள வட்ட, மாவட்ட பதிவாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கோரி உள்ளது.

மேற்படி அட்டைகளை இழந்தவர்கள் தற்காலிக வசிப்பிடங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருப்பின் அதற்கான உள்ளீடுகளை பெற்றுக்கொள்ள அறிமுக அட்டைக்குப் பதிலாக வட்ட, மாவட்ட பதிவாளர்களின் தற்காலிக கடிதத்தினை பெற்று விவசாயத்துக்கான உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## நேர்முகப் பரீட்சைக் கடிதம் தாமதம் தவிர்க்கப்படும்

### அரச அதிபர் புதிய ஏற்பாடு

சாவகச்சேரி, மார்ச் 15

அரச பதவிகள் மற்றும் சபை, கூட்டுத்தாபன பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கும் கடிதங்கள் தாமதமாக வந்து சேர்வதை தவிர்க்கும் வகையில், புதிய நடைமுறை ஒன்றை யாழ். அரச அதிபர் அமுல் செய்யவிருக்கிறார்.

இதுபோன்ற கடிதங்களை கொழும்பில் உள்ள அரச அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும் —

பின்னர் அவற்றை இங்கு எடுத்து வந்து பரீட்சார்த்திகளுக்கு கையளிக்கவும் — அரச அதிபர் புதிய நடைமுறையை அமுல்செய்யவுள்ளார்.

நேர்முகப் பரீட்சை மற்றும் பதவி உயர்வுப் பரீட்சை ஆகியவற்றுக்கான கடிதங்கள் தாமதமாகக் கிடைப்பதால் பலர் அவற்றுக்கு சமுகமளிக்க முடியாது போய்விடுகிறது. (இ-3)

## வெளிச்சம் சிறுகதைகள் வெளியீட்டு விழா நாளை

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் "வெளிச்சம்" சஞ்சிகையில் வெளிவந்த கதைகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட கதைகளைக் கொண்ட, வெளிச்சம் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறும்.

இவ்விழாவில் வன்னி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. நிகன் தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் திருமதி ரதி ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி வைப்பார்கள்.

திரு செ. கருணாகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வன்னி மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் செல்வம்மாமா வரவேற்புரையை நிகழ்த்த, கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

இத்தொகுதியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டு வைப்பார். வன்னிமாவட்டத் தளபதி திரு குமணன் சிறப்புப் பிரதிகளை வழங்க அரச அதிபர் திரு. உடுவை தில்லை நடராஜா, பேராசிரியர் அ. சண்முகதாஸ், கிளிநொச்சி இட்டபிடல் உத்தியோகத்தர் திரு. கேதீஸ்வரன் ஆகியோர் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார்கள் பதிலுரையை திரு. நா. யோகேந்திரநாதன் வழங்குவார்

## பல்கலை மாணவர் உதவிப் பணம்

கிளிநொச்சி, மார்ச் 15

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் 9ஆம், 10ஆம் கட்ட உதவிப் பணம் தற்பொழுது கிளிநொச்சி விவசாயபீடத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது

இம்மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை உதவிப் பணம் வழங்கப்படும்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கான உதவிப் பணம் வழங்கும் நாள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது (இ-124)

# பணயக் கைதிகளாக மாணவர்களை புலிகள் பிடிக்கலாம் என அச்சமாம்

கொழும்பு, மார்ச் 15

பாதுகாப்புப் படையினருக்கும், சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் புதிய அச்சம் ஒன்று தோன்றியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் கொழும்பில் பாடசாலை மாணவர்களைக் கடத்திச் சென்று தமக்கு வேண்டிய காரியத்தைச் சாதிக்க முயலக் கூடும் என்பதே அந்த அச்சமாகும்.

கொழும்புப் பாடசாலைகள் இப்போது தொடக்கம் ஓரளவு இயங்கத் தொடங்கியுள்ளன. நகரில் உள்ள முக்கிய பாடசாலைகளில் ஒன்றைத் தாக்கி அங்குள்ள மாணவர்களில் சிலரை விடுதலைப் புலிகள் கடத்திச் செல்லக்கூடும் என்றும் —

அந்த மாணவர்களைப் பணயக் கைதிகளாக வைத்து இப்போது மகஸின் சிறைச்சாலையில் உள்ள தமது முக்கிய புள்ளிகளை விடுதலை செய்யக் கோரலாம் என்றும் —

அல்லது அவர்களை கிழக்கில் உள்ள சிறைச்சாலை ஒன்றுக்கு மாற்றுமாறு நிபந்தனை விதிக்கலாம் என்றும் — பாதுகாப்புப் படையினரும், சிறைச்சாலை அதிகாரிகளும் அச்சம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகஸின் சிறைச்சாலையில் [illegible] புலிகள் உறுப்பினர் [illegible]னர். இவர்களில் பலர் விடுதலைப் புலிகளின் முக்கிய புள்ளிகள். இவர்கள் வழக்குகளுக்காக நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லப்படுவதும் உண்டு.

இவர்களில் எவரையும் வேறு எந்தச் சிறைச்சாலைக்கும் இடமாற்றம் செய்வதில்லை என்று தமது திணைக்கள மட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் எச். ஜி. தர்மதாசா "வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, மட்டக்[illegible] சிறைச்சாலைகள் பாதுகாப்புக் குறைந்தவை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

---

# விசர்நாய் தடுப்பு மருந்து கிளிநொச்சிக்கு வந்தது

### ஆனால் 500 'டோஸ்' மட்டுமே

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் விசர்நாய் தடுப்பு மருந்தான ஏ. ஆர். வி. ஆகியன கடந்த திங்கட்கிழமை வந்துள்ளன.

இந்த வருடத்தில் முதல் காலாண்டுக்குரிய மருந்து வகைகளே வந்துள்ளன என்றும் —

முக்கிய சில மருந்து வகைகள் அனுப்பப்படவில்லை எனவும் — தெரிவிக்கப்பட்டது.

ஏ. ஆர். வி. தடுப்பு மருந்து 500 "டோஸ்" மாத்திரமே வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மகளிர் அபிவிருத்தி நிலைய நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 15

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நான்காவது கருத்தரங்குக் தொடரும், ஜீவாகாரம் வழங்கும் நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலை கிழக்கு, பாலயடிப்பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்றது

திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் போசாக்குச் சம்பந்தமான விளக்கங்களும், மகளிர் சுயதொழில் வாய்ப்புக்கள் பற்றிய திட்டங்களும் ஆராயப்பட்டன. அத்துடன் சுமார் 75 குடும்பங்களுக்கு ஜீவாகாரமும் வழங்கப்பட்டது. (இ-ரி)

## இந்து குருமாருக்கு நிவாரணம்

சாவகச்சேரி, மார்ச் 15

இடம்பெயர்ந்த இந்துக் குருமார் நலனோம்பு நிதியத்தின் நிவாரணம் வழங்கும் திட்டத்தின் 2 ஆம் கட்ட நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு மீசாலையில் உள்ள நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வின்போது 65 இந்துக் குருமாருக்கு உதவிகள் வழங்கப்படும்.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அகதிகள் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் ஆகியோர் இதில் கலந்து கொள்வர். (இ-3)

# முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகள்

சாவகச்சேரி, மார்ச் 15

யாழ்ப்பாணம் வலயம் ஒன்றின் முறைசாராக் கல்விப் பிரிவினால் பின்வரும் பாட நெறிகளுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகளில் பங்குகொள்ள விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் வலயம் ஒன்று முறைசாராக் கல்விப் பிரிவில் மாதிரிப் படிவத்தைப் பெற்று எதிர் வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் கேட்டுள்ளார்.

பயிற்சி நெறிகளும் அதற்கான தகைமையும், நிலையமும் வருமாறு:-

★ சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி. இடம்;- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

★ சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) — ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்மொழியில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி. இடங்கள்;-சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் ம. வி.

★ உடையமைத்தல்;- ஆண்டு 9 சித்தி. இடங்கள்— சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

★ மோட்டார் வாகன மின் விணைப்பு — ஆண்டு 9 சித்தி. இடம்:- கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

★ மோட்டார் வாகனம் பழுது பார்த்தல் — ஆண்டு 9 சித்தி. இடம்:- கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

★ உணவு பதனிடல் ஆண்டு 9 சித்தி. இடங்கள்;- கச்சாய் அ. த. க. பாடசாலை, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம. வி.

★ புத்தகம் கட்டுதல் — ஆண்டு 9 சித்தி. இடம்;- கச்சாய் அ. த. க. பாடசாலை.

★ சைக்கிள் திருத்துதல் — ஆண்டு 9 சித்தி. இடம்:- கச்சாய் அ. த. க. பாடசாலை.

★ கைப்பணிப் பொருள் உற்பத்தி — ஆண்டு 9 சித்தி. இடம்:- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி.

## தமிழீழ வானொலி

வெள்ளி மாலை

★ 5-00—ஆரம்பம்
★ 5-02 — எழுச்சி கீதங்கள்
★ 5-10 — உயிராயுதம்
★ 5-30 — நாடகம்
★ 5-45 — நேயர் கடிதம்
★ 6-00 — புதியவை
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — இவ்வாரம் இவர்
★ 6-30 —ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

வெள்ளி இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8-02 — கலை மஞ்சரி
★ 8-20 — அரசியல் அரங்கம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப் பாடல்கள்

சனி காலை

★ 7-00 — ஆரம்பம்
★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 வரை எழுச்சி கீதங்கள்
★ 7-30 — செய்திகள்.
★ 7-33 —பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 - அறிவிப்புகள் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப் பாடல்கள்.

ஏவுகணைப் பரிசோதனையால்

## சீன - அமெரிக்க உறவில் நெருக்கடி வலுக்கிறது

தைப்பே, மார்ச் 15

சீனா மற்றும் ஓர் ஏவுகணையை நேற்று தைவானுக்கு வெகு சமீபமாக ஏவிப் பரிசோதித்ததை அடுத்து தென் சீனக் கடலில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் நெருக்கடி நிலை முற்றி வருகிறது.

தைவான் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சீனாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் விதத்திலும் தைவானுக்கு ஆதரவாகவும் அமெரிக்கா இரு விமானம் தாங்கிக் கப்பல்களை அப்பிரதேசத்துக்கு அனுப்பியுள்ளது.

முன்னர் போர்மோசா என்று அழைக்கப்பட்ட தைவான் 1949 ஆம் ஆண்டு சீனாவில் இருந்து பிரிந்து அமெரிக்க உதவியுடன் தனி ஆட்சி அமைத்துக் கொண்டதில் இருந்து சீனா தைவான் மீதான உரிமையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தைவானில் ஜனநாயக முறையிலான முதலாவது தேர்தல் நடக்க இன்னும் பத்துக் தினங்களே இருக்கும் வேளையில், சீனா தனது ஏவுகணைப் பரிசோதனையை தைவானுக்கு எரிச்சலூட்டும் விதத்தில் தைவான் கரைக்குச் சமீபமாக நடத்தி வருகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியர் சந்திக்கும் நேரம்

ஓய்வூதியம் பெறுபவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் புதன், வெள்ளி ஆகிய இரு தினங்களில் மட்டும் காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை யாழ். செயலக ஓய்வூதியப்பகுதி உத்தியோகத்தர்களைச் சந்திக்க முடியும் என பிரதம கணக்காளர் க. சிவபாலன் தெரிவித்துள்ளார். இடம்பெயர்வு காரணமாக யாழ் செயலக வேலைப்பளு அதிகரித்துள்ளமையே இக் கட்டுப்பாட்டுக்குக் காரணம் எனவும் அவர் கூறினார். (உ-ரி)


## இடம்பெயர்ந்த இந்துக் குருமார் நலனோம்பு நிதியம்
## இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கல்

காலம்: 16 - 03 - 96 மாலை 3 மணி சனிக்கிழமை.

இடம்: நல்லை ஆதீனம்.

★ விண்ணப்பதாரிகளில் தெரிவு செய்யப்பட்ட 65 இந்துக் குருமார் குடும்பத்துக்கு இந்நாளில் நிவாரணம் வழங்கப்படும்.

(1,000 ருபா பணமும், பொருள்களும் வழங்கப்படும்)

நிதியத்தின் சார்பில்
ஆறு. திருமுருகன்
(செயலாளர்)

(C/4113)



## தென்மராட்சி பெற்ற அதி சிறந்த கல்விமான்



தென்மராட்சி கல்வி அபிவிருத்திக்காக தனது முழுமையான நேரத்தையும், சக்தியையும் இதயபூர்வமாக முழுமையாக செலுத்திவந்த

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## திருமதி புஸ்பா கணேசலிங்கம்

அவர்கள் இன்றிலிருந்து ஓய்வு பெறுவது தென்மராட்சிக் கல்விப் பகுதிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். கடந்த காலங்களில் இவர் போன்ற அதி சிறந்த கல்வியாளரை, தென்மராட்சி காணவில்லை. எதிர்காலத்திலும் தென்மராட்சிக் கல்வியில் இதயபூர்வமாக தனது முழுமையான நேரத்தையும், சக்தியையும் அர்ப்பணிக்கக் கூடிய ஒரு கல்வியாளரை தென்மராட்சி பெறும் என்பது சந்தேகமே.

விஞ்ஞானப் பட்டப்படிப்புடன், கல்வியியல் முதுமாணிப் பட்டத்தையும் கல்வி, தொழில்சார் தகைமைகளாகக் கொண்ட இவர். திணைக்கள நிர்வாகத்திலும், கல்வி நிர்வாகத்திலும் பிரச்சினைகளை விஞ்ஞான முறையில் அணுகித் தீர்த்து வைத்தமையினால் தொழிலுறவில் எவ்வித சிக்கலும் இவர் காலத்தில் ஏற்படவில்லை. இவர் தாம் ஆசிரியராகவும், அதிபராகவும் சேவையாற்றியமையை எப்போதும் நினைவு கூர்ந்து அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகளை அவர்களின் நிலைக்கு இறங்கி அணுகித் தீர்த்து வைத்தார். இவரின் முன்மாதிரியை ஏனைய கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் பின்பற்றுவது சிறந்தது.

ஆரம்பக் கல்வித்துறையில் விசேட அக்கறை கொண்டிருந்தார். இதனால் தென்மராட்சியில் எழுத்தறிவுள்ளோர் வீதம் மிகவும் கூடியுள்ளது.

திணைக்கள ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுடனான தொடர்பு முறை, வார்த்தைப் பிரயோகம் எவரின் மனத்தையும் கவரக்கூடியதாகவும், புண்படுத்தாதவையாகவும் அமைந்தமையினால் பலரின் பாராட்டையும் பெற்றிருந்தார்.

தென்மராட்சிக் கல்வி அபிவிருத்திக்காகவும், அதிபர், ஆசிரியர்கள் நலன் காப்பதற்காகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை ஏற்று தனது பணியைத் தொடர்ந்தவர் என்று கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவர் ஓய்வு பெற்றாலும், தென்மராட்சிக் கல்வி வளர்ச்சிக்கு இவரின் ஆலோசனைகள், உதவிகள் கிடைக்கும் வண்ணம், இவருக்கு நீண்ட ஆயுளையும் சுகபலத்தையும் இறைவன் வழங்க வேண்டுமென தமிழர் ஆசிரியர்கள் பிரார்த்திக்கின்றார்கள்.

த. மகாசிவம்,
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.
(C/4112)

ச. நடேசபிள்ளை,
செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
தென்மராட்சிக் கிளை.


## மாவீரரின் பெற்றோரை வருமாறு கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 15

29-10-1995 அன்று அளவெட்டிப் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி இராணுவத்தினரின் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த பின்வரும் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோரை அண்மையில் உள்ள மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

அந்த மாவீரர்களின் விவரது வருமாறு:)

★ கரும்புலிக் கப்டன் ஈழவன். திருச்செல்வம் றொபேட்சன், (நவாலி தெற்கு, மானிப்பாய்)

★ கரும்புலி லெப். வேணுதாஸ் (மட்டக்களப்பு)

★ கரும்புலி கப்டன் அகத்தி (அம்பறை)

★ கரும்புலி லெப் நளனன் அல்லது கோவிந்தன் (அம்பறை)

★ கரும்புலி கப்டன் சிறைவாசன் அல்லது திலீப் (பிள்ளையாரடி, கொக்குவில், மட்டக்களப்பு)

★ கரும்புலி ஜீவன் அல்லது தினகரன் (மட்டக்களப்பு)

★ கரும்புலி லெப் சசிக்குமாரன், செல்வராசா றொபின்சன் (ஆனந்தபுரம், கிளிநொச்சி)

★ கரும்புலி 2 ஆம் லெப். இசைச்செல்வன், நாகராசா சண்முகசீலன், (பண்டத்தரிப்பு)

★ கரும்புலி லெப். தொண்டன், இராசரத்தினம் கிருஸ்ணராஜ், (அளவெட்டி வடக்கு). (இ)

## கொழும்பு செல்லும் நேயாளருக்கு

வடமராட்சி, மார்ச் 15

விசேட சிகிச்சைக்காக கொழும்புக்கு கப்பலில் செல்லும் நோயாளர்கள் நாளை சனிக்கிழமை உரிய ஆவணங்களுடன் மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் அலுவலகத்துக்கு சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

சமூகம் தரும் நோயாளர்கள், வைத்திய நிபுணர்களால் பதிவுசெய்யப்பட்ட சிபார்சுக் கடிதம், தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களைக் கொண்டு வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு செல்லவென கடந்த 11 ஆம் திகதி பதிவு செய்த நோயாளர்களும் நாளை சமுகமளிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-173)

## வைத்தியசாலைக் குழு கொழும்பு பயணமானது

வடமராட்சி, மார்ச் 15

யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி டாக்டர் ந. கனகரத்தினம் தலைமையிலான இரண்டு நிர்வாக உத்தியோகத்தர்கள், ஒரு வைத்திய நிபுணர் அடங்கிய நால்வர் கொண்ட தூதுக்குழு செவ்வாயன்று கொழும்பு பயணமானது.

கொழும்பு, சுகதாரத் திணைக்கள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள கலந்தாலோசனையில் பங்குபற்றுவதற்காக, தலைமைக் காரியாலய அவசர அழைப்பை ஏற்றே இத்தூதுக்குழு ஹபறண கப்பல் மூலம் பயணமானது. (இ-15-173)

## பெரிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவி சிறிமணி அத்துலத் முதலிக்கு இந்த சுகாதார அமைச்சையும் மகளிர் விவகார சுற்றாடல்துறை அமைச்சையும் வழங்க சந்திரிகா திட்டமிட்டுள்ளாராம்.

தற்போதைய சுகாதார அமைச்சர் பௌஸிக்கு சிறிமணி அத்துலத் முதலியிடம் இருக்கும் போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு வழங்கப்படும்.

துறைமுக, தொலைத் தொடர்பு அமைச்சு நிமால் சிறிபால டி சில்வாவுக்கும்—

வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சு சி. வி. குணரட்ணவுக்கும்—

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மங்கள சமரவீரவுக்கும்—

தொழில், தொழில் பயிற்சி அமைச்சு லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கும்—

கலாசார, சமய விவகார அமைச்சு மகிந்த ராஜபக்ஷவுக்கும்— வழங்கப்படவிருக்கின்றது.

தோட்டக் கைத்தொழில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், நாடாளுமன்ற விவகாரம் ஆகிய அமைச்சுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு புதிய அமைச்சர்களுக்கு அவை வழங்கப்படும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்று சில அமைச்சர்கள் வசம் இருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுகளும் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு புதியவர்களுக்கு வழங்கப்படும்.

தற்போது பிரதி அமைச்சர்களாக இருக்கும் சிலரும் அமைச்சர்கள் பதவிக்கு நியமிக்கப்படுவர் என்று இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## ஊரிக்காடு கடல் பகுதியில் தீவிர ரோந்து

மந்திகை, மார்ச் 15

வடமராட்சி கடல் பிராந்தியம், வல்வெட்டித்துறை ஊரிக்காட்டுப் பகுதியில் நேற்று பிற்பகல் கடற்படையினர் தீவிர ரோந்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஊரிக்காடு கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் பாரிய யுத்தக் கப்பல் ஒன்றும், இரண்டு பீரங்கிப் படகுகளும் நங்கூரமிடப்பட்டிருந்தன.

எனினும் பீரங்கித் தாக்குதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. இதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. (இ-15)

## 8 சிப்பாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவம் தொடர்பாக நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் எட்டு இராணுவச் சிப்பாய்கள் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றனர்.

திருகோணமலை பதில் நீதிவான் திரு.மு. கோ. செல்வராஜா முன்னிலையில் கடந்த 3 நாள்களாக நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பிலேயே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதனையடுத்து அந்த எட்டுச் சிப்பாய்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இராணுவச் சிப்பாய்கள் 97 பேர் இந்த அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டிருந்தனர். (உ-ரி-6)

## இறுதியாட்டத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணியை எதிர்த்து விளையாட வேண்டிய ஆஸ்திரேலிய அணி, கொழும்பு மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதலை அடுத்து — பாதுகாப்பு பிரச்சினையைக் காரணம் காட்டி — ஸ்ரீலங்காவுக்கு வந்து விளையாட மறுத்ததும்—

இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் சர்ச்சையும், உறவில் குழப்பமும் எழுந்த நிலையில் விளையாடுவதற்கு வர மறுத்த காரணத்தால் அந்த ஆட்டத்தின் வெற்றி ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்பட்டதும் தெரிந்ததே.

இதற்கிடையில்—

''கொழும்புக்கு வந்து விளையாட மறுத்ததன் மூலம் முதற் சுற்று ஆட்டத்தில் எங்களைச் சந்திக்காமல் ஆஸ்திரேலியா தப்பிக்கொண்டது ஆனால் இந்தச் சுற்றுப் போட்டியில் முழுதாக எங்களிடமிருந்து ஆஸ்திரேலியா அணி தப்பமுடியாது. ஏதோ ஒரு கட்டத்தில் அவர்கள் எங்களைச் சந்தித்தே ஆக வேண்டும். அப்போது அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவோம்.'' — என்று ஸ்ரீலங்கா அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்க கூறியிருந்தார்.

அவர் கூறியபடி ஆஸ்திரேலிய—ஸ்ரீலங்கா அணிகள் இறுதியாட்டத்தில் மோதும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

### நேற்றைய அரையிறுதியாட்டம்

நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பத்தில் மளமளவென்று விக்கெட்டுகளை இழந்தது. ஆரம்பத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 18 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த ஆஸி அணி பின்னர் ஒருவாறு சமாளித்து தனக்கு வழங்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடிய மேற்கிந்திய அணியின் ஆரம்ப ஆட்டம் சிறப்பாக இருந்தது 41 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் முன்னணியில் இருந்த மேற்கிந்திய அணி அடுத்த 51 பந்து வீச்சுகளில் 37 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

49.3 ஓவர்களில் 202 ஓட்டங்களுக்கு மேற்கிந்திய அணியின் சகல விக்கெட்டுக்களையும் வீழ்த்தியதன் மூலம் ஆஸி அணி வெற்றியீட்டியது.


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி அன்னப்பிள்ளை

(அராலி வடக்கு, செட்டியார்மடம்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், அராலியை வசிப்பிடமாக கொண்டவரும், தற்பொழுது சங்கத்தானையில் வசித்துவந்தவருமான சி. அன்னப்பிள்ளை நேற்று 14-3-96 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரியின் (ஆசிரியை, அராலி இந்துக்கல்லூரி) அன்புத் தாயாரும், கம்சிகா மணிவண்ணனின் அன்புப் பேர்த்தியும், மணிவண்ணவின் (டோகா) அருமை மாமியும், நாகமணி (மலேசியா), சின்னம்மா ஆகியோரின் சகோதரியும், அம்பலம் ஜெயரத்தினத்தின் (காரைநகர்) அன்பு பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15-03-96 மாலை 2 மணியளவில் சாவகச்சேரியில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சிவனேஸ்வரி மணிவண்ணன்
(ஆசிரியை - மகள்)
தம்பாப்பிள்ளை வீதி,
சங்கத்தானை.
(41043)

### தம்பிமுத்து மகேந்திரம்

(தென்னை, பனை அபிவிருத்தி கூட்டுறவு சங்க, சீனியாலை பொறுப்பாளர், சரசாலை)

சரசாலை வடக்கை பிறப்பிடமாக கொண்ட த. மகேந்திரம் (14 - 3 - 96) நேற்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - திருமதி முத்து தம்பதிகளின் அன்பு மகனும், சந்திரலீலா (ஆசிரியை, ஸ்ரீபாரதி வித்தியாசாலை, மந்துவில்), சந்திரலேகா ஆகியோரின் அருமை சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-3-96) அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக 2 மணியளவில் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரலீலா
(சகோதரி)
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(41041)

### செல்வி நாராயணன் வரதலட்சுமி

(ஆசிரியை யா/ காரைநகர் பாலாவோடை த. க. பாடசாலை — தொல்புரம்)

காரைநகர் சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது சாவகச்சேரியில் வசிப்பவருமான நா. வரதலட்சுமி (14- 03-96) நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாராயணன் — பத்தினி தம்பதிகளின் அன்பு மகளும் சரஸ்வதி, குகநேசன் (உபதபால் அதிபர் — வலந்தலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாலேந்திராவின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (15-03-96) 12 மணியளவில் சாவகச்சேரி தேவாலயத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. குகநேசன்
(சகோதரன்)
சாவகச்சேரி.
(41042)



## ★ கொடிகாமத்தில் ★
# ஸ்கைலைன்ஸ் போட்டோஸ்ரட் பிரதி சேவை

சாவகச்சேரியில் இயங்கிவரும் எமது நிறுவனத்தின் கிளை இன்று முதல் (15 — 03 — 96) கொடிகாமத்திலும் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.

(சி/2990)

கொடிகாமம் புகையிரதநிலைய முன் மேல்மாடி,
கண்டி வீதி, கொடிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 15-03-96 இல அச்சிட்டு வெளியிடப்பட்டது.